4வது சிறுழக்குகள் நீதிமன்றம், சென்னை- 600 104.

நாள். 26.03.2026

எம்.சி.ஓ.பி எண். 3683/2021

ம.சா. 2

பெயர். சுதாமதி

க/பெ.திரு. வெங்கடேஷன்

வயது. 51

**மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சிம்ஸ் மருத்துவமனையில் சீனியர் மேனேஜராக எம்ஆர்பி துறையில் பணியாற்றி வருகிறேன். இறந்தவரின் பெயர் சுரேஷ் ராமநாதன். சுரேஷ் ராமநாதன் தரப்பில் இருந்து மருத்துவ ரசீகளின் நகல்களை கேட்டு மருத்துமனையில் மனு தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. 10.10.2019 முதல் 16.11.2019 வரை சிகிச்சை பெற்றார். மேற்படி நபர் சிகிச்சையில் இருந்தபோது காலமாகி விட்டார். இறப்பிற்கான காரணத்தை மசாஆ13ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது செப்டிக் ஸாக் மல்டி ஆர்கன் டிஸ் ஃபங்சன் காரணமாக அவர் இறந்து உள்ளார். உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது மொத்தமாக மருத்துவ செலவுகள் ரூ.18,42,623/- செலவாகி உள்ளது. இந்த தொகையை தவணை முறையில் தான் செலுத்தினார்கள். மேற்படி எத்தனை தவணை முறையில் செலுத்தினார்கள் என்பதை சொல்ல முடியுமா என்றால் 24 தவணைகளில் செலுத்தி உள்ளார்கள். சிகிச்சையில் இருந்தபோது அவரின் தள்ளுபடி கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி தொகையை பணமாக கட்டப்பட்டதா அல்லது காசோலையாக செலுத்தப்பட்டுள்ளதா என்பதனை தற்போது உள்ள ஆவணத்தின் அடிப்படையில் சொல்ல இயலாது. தேவைபட்டால் மேற்படி ஆவணத்தை சமர்பிக்க முடியுமா என்றால் முடியாது. 2019-ல் வழங்கப்பட்டதாகும் அதனால் தற்போது அதை பற்றி கூற இயலாது. மசாஆ15 ரசீதுகளில் Mode of payment குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ரசீதுகள் சுரேஷ் ராமநாதன உயிருடன் இருந்த போது ஜென்ரேட் செய்யப்பட்டதா அல்லது இறந்தபோது ஜென்ரேட் செய்யப்பட்டதா என்றால் பொதுவாக பில்கள் இறப்பிற்கு பிறகு அல்லது டிச்சார்ஜ் செய்யும் போது தான் ஜென்ரேட் செய்யப்படும். கடைசி தொகை இறந்த பிறகு தான் செலுத்தப்பட்டது. கடைசி தொகை ரூ.54,101/- ஆகும். மேற்படி தொகையை காப்பீடு மூலமாக திரும்ப பெற்றுள்ளதா என்றால் மருத்துவமனையில் இறந்தபோது ரொக்கமாக தான் செலுத்தினார்கள், பின்னிட்டு காப்பீடு மூலமாக செலுத்தினார்களா என்பது தெரியாது. மசாஆ14 மற்றும் 15 -ல் (E) என்று எதை குறிப்பிடுகிறது என்றால் இறந்து விடடார் என்பது பொருளாகும். நீதிமன்றத்தில் பொய்யான ஆவணங்களை சமர்பித்து உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணையின் பெயரில் தான் தாக்கல் செய்துள்ளேன்.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

ARUNDHADHI MAGESH

Digitally signed by ARUNDHADHI MAGESH